NOOLAHAM
FOUNDATION

# மரபுரிமைகளைத் தேடி: காட்சிப்படுத்தல் செயற்றிட்டம் 2020

www.noolahamfoundation.org

| | |
|---|---|
| செயற்றிட்ட தலைப்பு | மரபுரிமைகளைத் தேடி: காட்சிப்படுத்தல் செயற்றிட்டம் |
| செயற்றிட்ட எண் | NF/PG/2020/0005 |
| செயற்றிட்ட இடம் | இலங்கை |
| செயற்றிட்ட காலம் | 2020 |
| நிறைவேற்றும் அமைப்பு | நூலகம் நிறுவனம் |
| முக்கிய பங்குத்தாரர்கள் | நூலக நிறுவனம்,சிறகுகள் அமையம்,பிரித்தானிய நூலகம் |
| பாதீடு | 263,682.50 |

## நூலக நிறுவனம்

நூலக நிறுவனமானது இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்களின் அறிவுத் தொகுதிகளையும் மரபுரிமைகளையும் ஆவணப்படுத்துவதில் ஈடுபட்டு வரும் ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனமாகும். 2005 முதல் திறந்த, கூட்டுச் செயற்பாட்டை முன்னிறுத்திச் செயற்பட்டு வரும் நூலக நிறுவனம் இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்கள் தொடர்பான ஒரு முதன்மையான உசாத்துணைத் திரட்டினை உருவாக்கியுள்ளது. பல்வேறு செயற்றிட்டங்கள் மூலம் ஆவணப்படுத்தற் பணிகளை நூலக நிறுவனம் முன்னெடுத்து வருகிறது.

## செயற்றிட்டச் சுருக்கம்

நூலக நிறுவனம் முன்னெடுக்கும் செயற்பாடுகளில் ஆவணப்படுத்லின் ஓர் பகுதியாக மரபுரிமைகளைத் தேடி என்ற இரண்டு நாள் கண்காட்சி 2020 பிப்ரவரி 22 மற்றும் 23 ஆகிய தேதிகளில் இந்து கல்லூரி மரபுரிமை பிரார்த்தனை மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டது. யாழ்ப்பாண. சிறகுகள் அமையம் நூலகம் நிறுவனத்துடன் இணைந்து இக்கண்காட்சியை நடத்தியது. இந்த கண்காட்சியில், ஓலைசுவடிகள், கையெழுத்துப் பிரதிகள் மற்றும் அச்சிடப்பட்ட ஆவணங்களை டிஜிட்டல் மயமாக்கும் மற்றும் பாதுகாக்கும் செயல்முறைகளுக்கான விளக்கங்கள் வழங்கப்பட்டதுடன் மிகவும் பழைய மற்றும் அரிய ஆவணங்களும் காட்சிப்படுத்தப்பட்டன.

## அறிமுகமும் பின்புலமும்

நூலக நிறுவனத்தின் ஆவணப்படுத்தல் மற்றும் ஓலைச்சுவடிகள் கண்காட்சியும் கலந்துரையாடலும் "மரபுரிமைகளைத் தேடி" என்னும் தலைப்பில் மாசிமாதம் 22, 23 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மரபுரிமைப் பிரார்த்தனை மண்டபத்தில் இடம் பெற்றது.

நூலக நிறுவனமானது 15 வருட காலமாக ஈழத்து தமிழ் பேசும் சமூகத்தினை எண்ணிம வடிவில் ஆவணப்படுத்தும் பணியில் 84,000 ஆவணங்களை ஆவணப்படுத்தியுள்ளது. குறித்த ஆவணங்களில் தெரிவு செய்யப்பட்ட அரிய ஆவணங்கள் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்டன. ஒலைச்சுவடிகள், பத்திரிகைகள், சஞ்சிகைகள், நினைவு மலர்கள் ஆகிய அச்சிடப்பட்ட ஆவணங்களும் கண்காட்சியில் இடம்பெற்றன. அத்துடன் சுவடிகள் மின்வருடி ஆவணப்படுத்தும் முறைமை, நூலக இணையத்தளங்களை கையாளும் வழிமுறைகள், வாய்மொழி வரலாறு செயற்பாடு, தொழிற்கலைகள் ஆவணப்படுத்தல் ஆகிய வகைகளிலான கண்காட்சி கூடங்கள் என்பனவும் அமைக்கப்பட்டிருந்தன. கண்காட்சியின் ஆரம்ப நிகழ்வுகள் 22.02.2020 சனிக்கிழமை காலை ஆரம்பமாகின, விழாவில் நூலக நிறுவனத்திற்கான ஆவணங்களை வழங்கியோர் கௌரவிக்கப்பட்டனர். தொடர்சியாக மரபுரிமைகளை ஆவணப்படுத்தல் தொடர்பிலான கலந்துரையாடல் நிகழ்வுகள் இரண்டு தினங்களும் இடம்பெற்றன. ஈழத்து எழுத்தாளர்களின் நூல்களை கொண்டமைந்த "எங்கட புத்தகங்கள்" விற்பனை நிலையமும் கண்காட்சியில் இடம்பெற்றிருந்தது. குறித்த கண்காட்சி ஒழுங்கமைப்பு பணியினை நூலக நிறுவனத்தினருடன் இணைந்து சிறகுகள் அமைய செயற்பாட்டாளர்கள்

மேற்கொண்டிருந்தமை சிறப்பானதொரு விடயமாகும். சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை கண்காட்சியினை ஆர்வத்துடன் பார்வையிட்டனர். கண்காட்சி, ஆவணப்படுத்தலின் அவசியத்தினை அவர்களுக்கு உணர்த்துவதாகஅமைந்தது.

## இலக்குகளும் நோக்கங்களும்

இந்த நிகழ்வு, ஓலைச் சுவடிகளை ஆவணப்படுத்தும் செயற்றிட்டத்தின் கீழ், அது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதை முதன்மை நோக்கமாகக் கொண்டது. அதேவேளை நூலக நிறுவனத்தின் 15 ஆண்டுகால அடைவுகள் குறித்து மக்கள் அறியச் செய்வதும் நிகழ்வின் இன்னொரு நோக்கம். முழுமையான நோக்கங்களைப் பின்வரும் பட்டியலில் காண்க

- மக்களுக்கு ஆவணப்படுத்தலின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
- சுவடிகளை ஆவணப்படுத்துதல் சார்ந்த செயற்பாடுகளை மக்களுக்கு அறிமுகப்படுத்தி அதன் முக்கியத்துவத்தை உணர்த்துதல்.
- ஆவணப்படுத்தலுக்காகச் சுவடிகள் வழங்கியோரைக் கௌரவித்தல்
- ஆவணங்களைத் தேடிச் சேகரித்து ஆவணப்படுத்தல் தொடர்பான அறிமுகத்தை வழங்குதல்
- மக்களுடன் நிறுவனத்தின் தொடர்புகளை விரிவுபடுத்தல்
- (நிறுவனத்தின் செயற்பாடுகளில் கூடுதலான தன்னார்வலர்களை இணைத்தல்
- நூலகம் நிறுவனத்தின் செயற்பாடுகளை சமுகத்திற்கு விளங்கச் செய்தல், நூலகத்தின் கல்வி வளங்கள் செயற்றிட்டத்தின் பயன்பாட்டை மாணவர்களிடம் கொண்டு போய்ச் சேர்த்தல் ,சமுக நிறுவனங்களை ஆவணப்படுத்தலில் இணைத்தல்

## செயற்பாடுகள்

- **திறப்புவிழா ஒழுங்கமைப்பு**

  (பிரதம விருந்தினர்கள்,சுவடிகள் உதவியோருக்கான மதிப்பளிப்பு கௌரவிப்பு)

- **கண்காட்சி ஒழுங்கமைப்பு**

  காட்சிக் கூடங்கள், காட்சிக்கூடங்களில் பணியாற்றியோர், காட்சிப்பொருட்கள் உதவியோர்,கண்காட்சிக்கு வருகை தந்தோர்,கண்காட்சிக்கு வருகை தந்தோர் கருத்துக்கள்பதிவேடு போன்ற ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தன)

- **கலந்துரையாடல் ஒழுங்கமைப்பு**

  கலந்துரையாடல்-1: மறைந்த ஈழத்து ஆவணங்களை நோக்கி (ஞா.பாலசந்திரன்,.சிவசண்முகராசா, எஸ்.ஜெபநேசன் அடிகள், எம்.ஐ.எம்.சாக்கிர், சு.குணேஸ்வரன், தி.கோபிநாத்)

  கலந்துரையாடல்-2: மறைந்து செல்லும் மரபுரிமைகளை ஆவணப்படுத்தல் (சி.கிரிசாந், ரியாஸ் அஹமட், இ.மயூரநாதன், லுனுகலை சிறி, சொ.பிரசாந்,யதார்த்தன்)

- **தன்னார்வலருக்குச்செயற்பாட்டாளர்கள் -(**சிறகுகள் அமையம்)
- சுஜுவன் தர்மரத்தினம்
- ஜுவலக்சி பரமசிவம்
- நாகலோஜினி தவயோகநாதன்
- விஜயசூர்யா சிந்துஜன்
- தாட்சாயினி செல்வகுமார்
- அனோஜா தனராஜலிங்கம்
- நிலக்சிகா மருதலிங்கம்
- பார்தீபன் கஜேந்திரன்

- ராஜா சஜுவன்
- நாகராசா பபித்திரன்
- தனபாலசிங்கம் உமேஷ்
- தெய்வேந்திரம் ஆதவன்
- குகஜினி
- சங்கவி சுத்தானந்தராஜா
- அமிர்தலிங்கம், லதாங்கன்
- அரவிந்தன் அபிராம்
- ராஜேஸ்வரன் அரவிந்தன்
- தர்சன பிரேம்குமார்
- அருன்ஜா அருள்ராஜா
- பத்மநாதன் தர்சிகா
- தாரனிகா பத்மநாதன்
- மேனகன் விஜயநாதன்
- மனோகரன், கஜகிருஷ்ணா
- சர்வேந்திரன் பிருந்தாபன்
- கிஷாந்திகா நேசராசா
- ராஜேஸ்வரன் கிரிசாந்

**நடிபங்குகளும் பொறுப்புக்களும்**

- ஊடகப் பொறுப்பு:   சேரன், சுஜுவன்
- வடிவமைப்புப் பொறுப்பு:   ஜதுபன், பரதன், உமாதரன், கோபிநாத்
- அழைப்பு பொறுப்பு: சாலினி
- சமூக ஊடகப் பொறுப்பு:  கோபிநாத்
- மண்டப ஒழுங்கமைப்பு:  ஐதுபன், சுஜுவன்
- காட்சிப்பொருட்கள் ஒழுங்கமைப்பு: விதூசன், மயூரநாதன், டெல்சன், மியூரி
- செயற்பாட்டுக் குழு: சிறகுகள் அமையம்
- Documentation: உமாகரன்
- திறப்பு விழாப் பொறுப்பு: கோபிநாத், ஆர்த்தி
- நிதிப் பொறுப்பு: சேரன், சாலினி

**அடைவுகள்**

- நூலகம் நிறுவனத்தின் பதினைந்து வருடகால அடைவுகளை வெளிப்படுத்தல்
- அடுத்த தலைமுறையினருக்கான விழிப்பூட்டலாக ஒழுங்குசெய்யப்பட்டமை
- ஆவணங்களை தேடி சேகரித்து ஆவணப்படுத்தல் தொடர்பான முன்மொழிவுகளை வழங்குதல்
- மக்களுடன் நிறுவனத்தின் பங்கேற்பை விரிவுபடுத்தல்
- (நிறுவனத்தின் செயற்பாடுகளில் தன்னார்வலர்களை பெருமளவில் இனைத்தல் )
- நூலகம் நிறுவனத்தின் செயற்பாடுகளை சமுகத்திற்கு விளங்க செய்தல்
- கல்வி வளங்களின் பயன்பாட்டை மாணவர்களிடம் கொண்டு போய் சேர்த்தல்
- சமுக நிறுவனங்களை ஆவணப்படுத்தலில் இனைத்தல்
- ஆவணப்படுத்தலின் முறையான பண்புகளை மக்களிடம் சேர்த்தல்
- ஆவணப்படுத்தலின் முக்கியத்துவத்தினை மக்களிடையே கொண்டுசேர்த்தல்
- கலந்துரையாடல் பதிவுகள் ஆவணப்படுத்தப்பட்டமை

**எதிர்கொண்ட  சவால்கள்**

- கண்காட்சி மண்டப ஒழுங்கு படுத்தல்களை மேற்கொள்வதில் ஆளணியினர் பற்றாக்குறை
- தளப்பாடங்கள் மற்றும் ஏனைய பொட்களின் மட்டுப்பாடு
- கண்காட்சிமண்டபம் மாடித்தளமாக காணப்பட்டமையினால் முதியவர்கள் பார்வயிட வருவதில் சிரமத்தை எதிர் கொண்டனர்

## கற்றல்களும் பரிந்துரைகளும்

- இவ் இணைப்பூடாக https://www.youtube.com/watch?v=MdGTTuyYRxI ( கண்காட்சி தொடர்பான கலந்துரையாடலில் பகிரப்பட்ட விடயங்களை அறியமுடியும்.
- இவ் இணைப்பூடாக உதயன் பத்திரிகையில் பகிரப்பட்ட விடயங்களை அறிந்துகொள்ளமுடியும் https://newuthayan.com/%E0%AE%A8%E0%AF%82%E0%AE%B2%E0%AE%95-%E0%AE%A8%E0%AE%BF%E0%AE%B1%E0%AF%81%E0%AE%B5%E0%AE%A9%E0%AE%A4%E0%AF%8D%E0%AE%A4%E0%AE%BF%E0%AE%A9%E0%AF%8D-%E0%AE%AE%E0%AE%B0%E0%AE%AA%E0%AF%81%E0%AE%B0%E0%AE%BF/
- இவ் இணைப்பூடாக அத்தியடி செய்தியில் பகிரப்பட்ட விடயங்களை அறிய முடியும் http://www.athirady.com/tamil-news/news/1364889.html
- தன்னார்வலர்கள் ஊக்கிவிப்பும், புதிய இணைதல்களுக்கான வாய்ப்புக்களும்
- நூலகம் நிறுவனத்தின் பதினைந்து வருடகால அடைவுகளை முழுமையாக அறிவதற்கான் வாய்ப்பாக அமைந்தமை
- சுவடிகளைப் பெறுவதற்கும் அது தொடர்பான எண்ணிமப்படுத்தை மற்றும் ஆவணப்படுத்தல் செயற்பாடுகள் தொடர்பாக முழுமையான விடயங்களை அறிந்து கொள்ள முடிந்தமை

## மரபுரிமைகளைத்தேடி காட்சிப்படுத்தலுக்கான சில புகைப்படங்கள்







